திருத்தப்பட்டது

செய்தி வெளியீடு எண் – 91 நாள்– 28–1–2010

# சமச்சீர் கல்வி முறையின்கீழ் அறிமுகப்படுத்தப்படும் பாடநூல்கள் குறித்த ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடைபெற்றது!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், சமச்சீர் கல்வி முறையின்கீழ் தமிழகப் பள்ளிகளில், வரும் கல்வியாண்டிலிருந்து முதல் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பாடநூல்கள் குறித்த ஆலோசனை கூட்டம் இன்று (28–1–2010) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

சமச்சீர் கல்வித் திட்டத்திற்கான பொதுப் பாடத் திட்டம் குறித்து ஆய்வு செய்வதற்காக 27–11–2009 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், புதிய பாடத் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்படும் பாடநூல்களைக் குறித்த நேரத்தில் தரமாகவும், பொலிவாகவும், மாணவர்களை ஈர்க்கும் வகையிலும் தயாரித்து வழங்குமாறு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அந்த அறிவுரைகளின்படி, பாடநூல்கள் தயாரிப்புக் குழுவினர்மூலம், முதல் வகுப்பு மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கான பாடநூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடநூல்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாடநூல்கள் தயாரிப்புக் குழுவினர் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் இன்று ஆய்வு செய்து, அவற்றை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாநில திட்டக் குழு துணைத் தலைவர் திரு. மு. நாகநாதன், மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு. ம. குற்றாலிங்கம், தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் கோ. சத்யகோபால், தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் திட்ட ஆலோசகர் திரு. எம்.பி. விஜயகுமார், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. பெ. பெருமாள்சாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. கு. தேவராஜன், ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சி இயக்குநர் திரு. ஆர். இளங்கோவன் மற்றும் பள்ளிக் கல்வித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,

சென்னை–9.